

திருப்பூர் மாவட்டம், பல்லடம் அரசு மருத்துவமனையில் டயாலிசிஸ் பிரிவில் ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக பொருத்தப்பட்டுள்ள இரண்டு புதிய டயாலிசிஸ் இயந்திரங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, மருத்துவ பணிகள் இணை இயக்குநர் மரு.மீரா, பல்லடம் நகர கழக செயலாளர் ந.ராஜேந்திரகுமார், மாவட்ட அறங்காவலர் குழுத்தலைவர் கீர்த்தி சுப்பிரமணியம், நகர்மன்றத் தலைவர் கவிதாமணி ராஜேந்திரகுமார் உள்பட இந்நாள், முன்னாள் கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.

## ஒன்றிய பா.ஜ.க.வின் கைப்பாவையாக செயல்படும் இந்திய தேர்தல் ஆணையம்!

# அரியலூர் மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## திருச்சி சிவா எம்.பி. கண்டன உரை!

அரியலூர், நவ.14-

அரியலூர் மாவட்டத்தில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, ஒன்றிய பாஜக அரசின் கைபாவையாகச் செயல்படும் இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்தும், வாக்காளர் பட்டியலைச் சீர்குலைக்கும் S.I.R. சதித்திட்டத்தை எதிர்த்தும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழிகாட்டுதலின் படி அரியலூரில் நமது மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கழக சட்டத்திட்ட திருத்த குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழகத் துணைப் பொதுச்செயலாளர், கழகத்தின் மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா எம்.பி.கண்டனப் பேருரையாற்றினார்.

திருச்சி சிவா எம்.பி. பேசியதாவது வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தத்தில் அரசியல் கட்சிகளை சேர்க்காமல் முடிவெடுங்கள் என அதிமுக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது என்ன விசித்திரம் இவர்கள் அரசியல் கட்சி தானா என்ற ஐயப்பாடு வருகிறது வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்திற்கு எதிராக திமுக சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது இன்று விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது முதலில் வழக்கு தொடுத்து திராவிட முன்னேற்ற கழகம். இப்பொழுது நம்மோடு இணைந்து நமது கூட்டணி கட்சிகளும் உள்ளன இடையில் அதிமுகவும் ஒரு மனு கொடுத்துள்ளது இந்த வழக்கில் எங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள் என கூறியுள்ளனர் அதில் வாக்குச்சாவடி முகவர்களை நம்பி வாக்காளர் பட்டியல் திருத்தத்தில் ஈடுபடுத்தாதீர்கள் என கூறுகின்றனர் எப்போதுமே அரசியல் கட்சிகள் தங்களுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என கூற வேண்டும் தேர்தல் ஆணையம் எப்போது தன்னாட்சி பெற்ற அமைப்பாகும். தேர்தல் ஆணையம் என்ன சொல்கிறது என்றால் நான் எந்த முடிவு எடுத்தாலும் அரசியல் கட்சிகளை அழைத்து பேசி தான் முடிவு எடுப்பேன் என சொல்லி விட்டது. அதற்கு அதிமுக அரசியல் கட்சிகள் சேர்க்காமல் முடிவெடுங்கள் என கூறுகின்றனர் என்ன விசித்திரம் இவர்கள் அரசியல் கட்சி தானா என்ற ஐயப்பாடு வருகிறது எனவே வாக்குச்சாவடி முகவர்கள் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தத்தில் கவனமாக ஈடுபட வேண்டும் தகுதியுள்ள எந்த வாக்காளர்களும் விடுபடாமல் வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும் நமது தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாக ஆட்சி அமைக்கவேண்டும் அவர் தமிழ்நாடு முதலமைச்சர் ஆனால் தான் இந்த நாடு இன்னும் பல வளர்ச்சி அடையும், நாம், நம் மக்கள் சுயமரியாதையுடன் வாழலாம் என கூறினார்.

இக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கூட்டணிக் கட்சிகளான காங்கிரஸ், வி.சி.க., ம.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் தோழமைக் கட்சிகளின் தலைவர்களும், நிர்வாகிகளும், தொண்டர்கள் 5000 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பெருந்திரளாகப் பங்கேற்று, பாசிச பாஜக அரசின் ஜனநாயக விரோதச் செயலுக்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பினர்.

கூட்டத்தில் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மண்டல செயலாளர் பெ. அன்பானந்தம், CPI(M) மாநிலகுழு உறுப்பினர் ஐ.வி.நாகராஜன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில மாணவரணி பொருளாளர் பஷீத் ரகுமான், காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் ஆ.சங்கர், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மேற்கு மாவட்ட செயலாளர் அங்கனூர் சிவா, கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.கதிர்வளவன், மதிமுக மாவட்ட செயலாளர் ராமநாதன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் மாவட்ட செயலாளர் இளங்கோவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் நடராஜன், திராவிட கழக மாவட்ட தலைவர் விடுதலை நீலமேகம், மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட தலைவர் அக்பர் அலி, இந்திய முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் சையது இப்ராஹிம், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் சாகுல் ஹமீது, SDPI கட்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அமீன் சுல்தான், எம்.ஜி.ஆர் கழக மாவட்ட செயலாளர் மணிவேல், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், கழக மாவட்ட துணை செயலாளர்கள் மு. கணேசன், சி.சந்திரசேகரன், லதாபாலு, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, நகர கழக செயலாளர்கள் இரா. முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் கழக செயலாளர் ப.கோபாலகிருஷ்ணன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள், பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன்,

ரெ. சக்கரவர்த்தி, ரெங்க. முருகன், கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள்,

வி.எழில்மாறன், இரா. அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ. இளையராஜன், நா.கணேசன், பொன். செல்வம், கே.ஜி.எஸ்.முருகன், இரா.செந்தில்குமார், பேரூர் கழக செயலாளர் அ.அல்போன்ஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் சி.ஆர். எம்.பொய்யாமொழி, வி. எம்.ஷாஜகான், சுமதி கருணாநிதி, நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் கே.சி. லூயிகதிரவன், க.தர்மதுரை, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர். இராமராஜன், பானுமதி ராஜேந்திரன், இரா. குலோத்துங்கன்,

க.கருப்புசாமி, பானுமதி, மீனா, வை. முருகானந்தம் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.முருகேசன், வீர. சிவா, தர்மராஜ், ச.வசந்தபகலவன், பிரபாகரன், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் வார்டு கிளைக் கழகத் தோழர்கள், அனைத்து அணிகளின் பொறுப்பாளர்கள் உள்ளிட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமில் பங்குபெற்ற, 500க்கும் மேற்பட்ட அரவக்குறிச்சி தொகுதி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா அரவக்குறிச்சி லட்சுமி திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மீ. தங்கவேல், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.இளங்கோ, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் கலந்துகொண்டனர்.

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. மீனவர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பி.கீதாஜீவன் அறிவிப்பு



தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. மீனவர் அணி ஆலோசனைக் கூட்டம் தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் பி.கீதாஜீவன் தலைமையில் மாநில மீனவர் அணி துணை செயலாளர் துறைமுகம்.சி.புளோரன்ஸ், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் பி. அந்தோணிஸ்டாலின் முன்னிலையில் நாளை (15.11.2025 -சனிக்கிழமை) மாலை 6.00 மணி அளவில் கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக மீனவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1.மீனவர் தினம் கொண்டாடுவது - குறித்து.

2.SIR (சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு) - குறித்து.

3.கழக வளர்ச்சிப் பணி

**அமைச்சர் பி.கீதாஜீவன்**
செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.

## இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து

# கிருஷ்ணகிரி மாவட்ட ‘இந்தியா ’கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

## தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை! ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. முன்னிலை!

கிருஷ்ணகிரி, நவ. 14-

தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ் ஐ ஆர்) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க. மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் எம் எல் ஏ தலைமையில் “பிரம்மாண்ட கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெற்றது. மேற்கு மாவட்ட செயலாளர் ஒய் பிரகாஷ் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார் .

நாட்டில் உள்ள பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் எஸ் ஐ ஆர்க்கு தொடக்கம் முதலில் இருந்தே எதிர்ப்பு தெரிவித்தும், ஒன்றிய அரசின் கைப்பாவையாகவும், எதேச்சாதிகாரப் போக்குடனும் தேர்தல் ஆணையம் செயல்பட்டு தமிழ்நாட்டில் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்களே உள்ள நிலையில் தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் இந்தியத் தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R) கொண்டு வந்துள்ளது.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் எதிர்பார்த்தவாறே 04.11.2025.ஆம் தேதியிலிருந்து இன்று வரை களத்தில் எஸ்.ஐ.ஆர் பெரும்பாலான வாக்காளர்கள் நீக்கப்படும் அச்சத்தை உறுதிப்படுத்துகிறது.

தேர்தல் ஆணையத்தின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ள 2002 / 2005 வாக்காளர் பட்டியல்கள் குழப்பம் விளைவிப்பதாகவும் அமைந்துள்ளன. எனவே இந்த எஸ் ஐ ஆர் சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும், அதனை செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக மாறி, எதேச்சாதிகாரப் போக்கில் இந்தியத் தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ் ஐ ஆர்) கொண்டு வந்துள்ளதை கண்டித்தும் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ‘மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி’ கட்சிகளின் சார்பில் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை எதிரே கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் தலைமையிலும், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஒசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ் அவர்களது முன்னிலையிலும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளின் கண்டன உரையுடன் பிரம்மாண்டமான கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத், சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன்,

மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாநில செயலாளர் செங்குட்டுவன், மாநகர மேயர் சத்யா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முருகன், கிருஷ்ணமூர்த்தி, நரசிம்மன், மாவட்ட அவைத்தலைவர்கள் நாகராஜ், யுவராஜ் ,மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில விவசாய அணி துணை செயலாளர்கள் டேம்.வெங்கடேசன் , அரியப்பன் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் இசை, மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர்கள் சீனிவாசன் , அன்பரசன் மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் மாதேஸ்வரன் , மாநில மகளிர் ஆணைய குழு உறுப்பினர் மாலதி நாராயணசாமி, தொமுச கிருஷ்ணன், கோபாலகிருஷ்ணன்

உள்ளிட்ட மாவட்ட , ஒன்றிய , நகர பேரூர் கழக நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முடிவில் கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர் அஸ்லாம் நன்றியுரை ஆற்றினார்.



கோவை வடக்கு மாவட்டம் கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம், வார்டு எண் 10க்குட்பட்ட சரவணம்பட்டி பூந்தோட்டம் நகர் பகுதியில் மூலதன மானிய நிதி (CGF) திட்டத்தின் கீழ் ரூபாய்.82.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பூங்காவினை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் திறந்து வைத்தார். இதில் கோவை மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், வடக்கு மண்டல தலைவர் கதிர்வேல், உதவி ஆணையர் மகேஷ் கனகராஜ், உதவி செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி, மண்டல சுகாதார அலுவலர் முருகன், உதவி பொறியாளர்கள் சரண்யா, உத்தமன், சுகாதார ஆய்வாளர் லோகநாதன் உள்பட கழக நிர்வாகிகள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# எழும்பூர் தொகுதி: வார்டு எண்.108இல் நடைபெறும் பணிகள்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. ஆய்வு!

எழும்பூர், நவ. 14 -

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108-இல் நடைபெற்று வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஆய்வு செய்தார்.

சேத்துப்பட்டு, சுப்பராயன் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.2.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் தருவாயில் இருப்பதையும்;


சுப்பராயன் தெரு- வெங்கடாசலபதி தெரு சந்திப்பில் சிதிலமடைந்த நிலையில் இருந்த ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட மூடுண்ட மழைநீர் வடிகாலை (British Arch Canal) இடித்துவிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் புதிய மழைநீர் வடிகால் கட்டப்பட்டு வருவதையும்;

சேத்துப்பட்டு, மேயர் இராமநாதன் சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடல் மற்றும் உடற்பயிற்சிக் கூடத்தில் மேம்பாட்டு பணிகள் நடந்துவருவதையும் ஆய்வு செய்த சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், இப்பணிகளை விரைந்து முடிக்குமாறு துறை சார்ந்த அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.வி.என். சோமு

**நவம்பர் 14 (1997)**



**திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரர்களில் ஒருவராகவும், கழக அமைப்புச் செயலாளராகவும், சட்டத்துறைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**மத்திய பாதுகாப்புத் துறை இணையமைச்சராக பணியாற்றியவர்.**

**சென்னை மாநகராட்சியில் துணை மேயராகப் பணியாற்றியவர்.**

**குழந்தைப் பருவத்திலேயே தன்னுடைய தாயாரோடு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் 1938ஆம் ஆண்டு சிறைச் சாலையிலே இருந்தவர். அதுமுதல் கழகத்திற்காக பல தியாகங்கள் செய்து, சிறைக் கோட்டங்களுக்கு சென்று களம் பல கண்டு கழகத் தலைமை இடுகின்ற கட்டளைகளையெல்லாம் சிரமேல் தாங்கி அரும் தொண்டாற்றியவர்” என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**